# பெப்ரவரி - 14- செவ்வாய்

புனித சிறில்

**என்மீதிரங்கும்: ஆண்டவரே, எனக்குத் துணை செய்யும். - திபா 29:10**

--------------------------------------------------------------------

## முதல் வாசகம் : தொடக்க நூல் 6: 5– 8, 7:1- 5,10

மண்ணுலகில் மனிதருடைய அக்கிரமம் பெருகினதையும், அவர்கள் எண்ணமெல்லாம் எப்போதும் தீமையையே நாடியிருந்ததையும் கண்டு, கடவுள், இவ்வுலகில் மனிதனைப் படைத்து குறித்து வருந்தினார்.அப்போது அவர் மனம் நொந்து: நாம் படைத்த மனித இனத்தைப் பூமியில் இல்லாதபடி அழித்து விடுவோம். மனிதன் முதல் மிருகங்கள் வரையிலும், ஊர்வன முதல் வானத்துப் பறவைகள் வரையிலும், எல்லாவற்றையும் அழித்தொழிப்போம் ஏனென்றால், அவற்றைப் படைத்ததை நினைத்து வருந்துகிறோம் என்றார்.ஆனால் நோவா ஒருவர் மட்டும் ஆண்டவர் திருமுன் அருள் பெற்றவர் ஆனார்.ஆண்டவர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பெட்டகத்தினுள் செல்லுங்கள். ஏனென்றால், இப்பொழுது இருக்கிற மனிதர்களுக்குள்ளே உன்னையே நமது முன்னிலையில் நீதிமானென்று கண்டோம். சுத்தமான எல்லா மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடியும், அசுத்தமான மிருகங்களிலோ ஆணும் பெண்ணுமாக இரண்டு சோடியும்,வானத்துப் பறவைகளிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடியும் உன்னோடு சேர்த்துக்கொள். அதனால் பூமியெங்கும் உள்ளவற்றின் வித்து காக்கப்படும்.ஏனென்றால், இன்னும் ஏழு நாட்களுக்குப் பின் நாற்பது பகலும் நாற்பது இரவுமாகப் பூமியின் மேல் நாம் மழை பொழியச் செய்து, படைக்கப்பட்ட உயிரினங்கள் எல்லாவற்றையும் பூமியின் கண் அழித்து விடுவோம் என்றார். ஆகையால், ஆண்டவர் தனக்குக் கட்டளையிட்டபடி நோவா எல்லாவற்றையும் செய்து முடித்தார்.ஏழு நாட்களுக்குப் பின்னர் வெள்ளம் பூமியின் மீது பெருக்கெடுத்தோடியது.

**பதில்பாடல்:** ஆண்டவர் தம் மக்களுக்கு சமாதானம் அருள்வாராக

## நற்செய்தி: மாற்கு 8: 14 – 21

அந்நாட்களில் மீண்டும் ஒரு பெருங்கூட்டம் கூடியிருந்தது. சீடர்கள் அப்பம் கொண்டுவர மறந்துவிட்டார்கள். படகில் ஒரே ஓர் அப்பந்தான் இருந்தது. “பரிசேயருடைய புளிப்பு மாவையும், ஏரோதுடைய புளிப்பு மாவையும் குறித்து விழிப்பாயிருங்கள், எச்சரிக்கை” என்று அவர் அறிவுரை கூறினார். நம்மிடம் அப்பம் இல்லையே” என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். இதையறிந்த இயேசு அவர்களை நோக்கி, ”உங்களிடம் அப்பம் இல்லை என்று பேசிக்கொள்வானேன்? இன்னுமா உணரவில்லை? இன்னுமா விளங்கவில்லை? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்ணிருந்தும் காண்பதில்லையா? காதிருந்தும் கேட்பதில்லையா? உங்களுக்கு நினைவில்லையா? ஐயாயிரம் பேருக்கு ஐந்து அப்பத்தை நான் பகிர்ந்தபோது, மீதித்துண்டுகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள்?” என்று கேட்க, ”பன்னிரண்டு” என்றனர். ஏழு அப்பத்தை நாலாயிரம் பேருக்கு நான் பகிர்ந்தபோது மீதித்துண்டுகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள்?” என, ”ஏழு” என்றனர். அவர் அவர்களை நோக்கி, ”இன்னும் உங்களுக்கு விளங்கவில்லையா?” என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசு தமது வார்த்தைகளில் எப்போதும் உண்மை உள்ளவராயும், மற்றவர்கள் தம்மை யார் என்று புரிந்துகொள்ள தமது அருஞ்செயல்களாலும், போதனைகளாலும் வாழ்ந்து காட்டினார் என்பதனை நற்செய்தி விளக்குகின்றது. அதேவேளையில் தப்பான போதனைகள் மட்டில் மிகவும் கவனமாக இருக்குமாறும் இறைமகன் இயேசு எமக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாகவும் போதிக்கின்றார். அன்றைய திருச்சீடர்கள் போன்று, நாமும் எமது வாழ்வில் வரும் துயரங்கள், சோகம், வேதனை சோதனைகள், என்பவற்றில் மூழ்கும் போது இறைமகன் இயேசுவின் வாழ்வு தரும் வார்த்தைகளை மறந்து, தப்பான போதனைகளால் அனாப்பப்பட்டு, கிறிஸ்து இங்கே, கிறிஸ்து அங்கே என அலைபாய முயற்சி செய்கின்றோம். இவ்வேளைகளில் “இன்னுமா உணராமலும் புரிந்து கொள்ளாமலும் இருக்கிறீர்கள். உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று” (மாற்கு8:17) என்று எம்மைப் பார்த்து இறைமகன் இயேசு கேட்கின்றார். “நேரம் நெருங்கி விட்டது” என இறைமகன் இயேசு அறிவித்தும் எம்மத்தியில் நடப்பதென்ன? சிந்திப்போம். இறை இயேசுவின் அனுபவத்துக்குள் மாறிவிடுவோம் என்ற தயக்கமா? அல்லது இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்து அதனை விசுவசித்து ஏற்று எமது பாவ வாழ்வை மாற்றி அமைக்க வேண்டுமென்ற பயமா? ஆதலால், கானாவூரில் கலக்கம் ஏற்பட்ட வேளையில் “அவர் சொல்வதைக் கேட்டுச் செய்யுங்கள்” என்று அன்னை மரியாள் கூறியதை நினைவுக்குக் கொண்டுவருவோம். எமது எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டியவர்கள் நாங்களே என்ற உண்மையை ஏற்றுக் கொள்வோம். ஏனெனில் இவ்வுலகம் தர முடியாத அமைதியைத் தர வல்லவர் இயேசு ஒருவர் மட்டுமே.